O.S. No: 131/2021

பெயர் :ஜெயந்தி, க/பெ. சிங்காரவேலு

**வா.சா. 3**

12-12-2024

**குறுக்கு விசாரணை**

என் கணவர் சிங்காரவேலு காண்ராக்ட் வேலை மற்றும் செங்கல் சூலை வேலை பார்த்து வந்தார். நான் நகர கூட்டுறவு வங்கியில் நகர வீடுகட்டும் கூட்டுறவு வங்கியில் நியமன உறுப்பினர் என்றால் ஆமாம் . அந்த பொறுப்பை வைத்து தான் நான் என் மகன் குணசேகரனுக்கு கடன் வாங்கி கொடுத்தேன் என்றால் ஆமாம் . என்னிடம் காட்டப்படுவது கடனுக்கான பாஸ் புக்கா என்றால் ஆமாம் . அது **பி.சா.ஆ. 3 ஆகும்.** இந்த கடன் குணசேகரன் பெயரில் தான் உள்ளது என்றால் ஆமாம் . என்னிடம் காட்டப்படும் ரசீது கும்பகோணம் நகர கூட்டுறவு சங்க வீடு கட்டும் கடனை அடைத்ததற்கான ரசீது என்றால் ஆமாம் . அந்த ரசீது **பி.சா.ஆ. 4 ஆகும்.** நான் ஏற்கனவே கும்பகோணம் அய்யாவாடி சிவன்கோவில் தெருவில் வசித்ததற்கான என்னுடைய ஆதார் அட்டையின் நகல் என்றால் ஆமாம் . ஆதார் ஜெராக்ஸ் **பி.சா.ஆ. 5 ஆகும்.** நான் தற்போது அய்யாவாடி நெங்குந்தர் தெருவில் வசிக்கிறேன் என்றால் ஆமாம். நான் தாக்கல் செய்துள்ள ஆதார் அட்டை வா.சா.ஆ. 12 இல் 2015 இல் தான் முகவரி மாற்றியுள்ளேன் என்றால் ஆமாம் . என்னுடைய ஆதார் அட்டையின் படி நான் தண்டம் தோட்டம் அய்யாவாடியில் இருப்பதாக சொல்கிறேன் என்றால் ஆமாம் . 2017 ஆம் வருடம் வா .சா.ஆ. 12 இன் படி நான் என்னுடைய முகவரியை ஆதார் அட்டையில் எலுமிச்சங்காபாளையம் , தாராசுரம் என்று மாற்றிவிட்டேன் என்றால் ஆமாம் . வா.சா.ஆ. 13 இல் எனக்கு அதிகபடியாக கணக்கில் இருந்த தொகை 31,000/- என்றால் ஆமாம் . இந்த கடனை நினைத்திருந்தால் நான் என் பெயரிலோ , என் மூத்த மகன் பெயரிலோ வாங்கியிருக்கலாம் என்றால் ஆமாம் . இளைய மகன் வீடு கட்டுவதற்காக தான் அவர் பெயரில் வாங்கினேன் என்றால் ஆமாம் . இந்த கடனுக்கான தொகை முழுவதையும் இளைய மகன் தான் முழுமையாக கட்டினான் என்றால் சரியல்ல . பெரிய பையன் அனுப்பியதை நான் தான் போய் கட்டினேன் . இந்த வழக்கு விவரங்கள் எனக்கு முழுமையாக தெரியும் . என் இளைய மகன் எந்த வருடம் வெளிநாடு போனார் என்று ஞாபகமில்லை . அவர் திருமணம் ஆகும் முன்பே வெளிநாடு போய்விட்டார் என்றால் சரி . வெளிநாடு போய் வேலை பிடிக்கவில்லை என்று 3 வருடத்தில் வந்துவிட்டார் . அதன் பின் 3 வருடங்கள் இங்கே இருந்து

திருமணம் ஆன பிறகு தான் வெளிநாடு போனார் . அவரது பாஸ் புத்தகத்தை பார்த்தால் அவர் எப்போது வெளிநாடு போனார் , எப்போது வந்தார் என்று தெரியும் . பிரதிவாதி தொடர்ச்சியாக வெளிநாட்டில் தான் வேலை பார்த்தார் என்றாலும் அவ்வப்போது வந்து போனார் என்றால் சரியல்ல. இந்த வழக்கில் வாதிக்கு பிரதிவாதி ரூபாய் 12 லட்சம் கொடுக்க வேண்டும் என்பதை எவ்வாறு தீர்மானிக்கப்பட்டது என்றால் பெரிய மகன் வெளிநாட்டில் இருந்து வந்து இடம் வாங்க ரூபாய் 4 லட்சம் இளைய மகனிடம் கொடுத்தார் . மீண்டும் மறுவருடம் வரும் போது மிச்ச பணம் கொடுத்தார். என்னிடம் கொடுத்து தான் கொடுக்க சொன்னார் . அப்போது மொத்தமாக இதுவரை 12 லட்சம் ஆகிறது என்று சொன்னான் . என்னிடம் கொடுத்து கொடுக்க சொன்னதை நான் எண்ணி பார்க்கவில்லை . அவ்வாறு எந்த பணமும் கொடுக்கவில்லை என்றாலும் நான் என் பெரிய மகனுக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. உறுதி மொழி பத்திரம் ஜனவரி 25 ஆம் தேதி எழுதப்பட்டது . வருடம் நினைவில்லை. அந்த பத்திரம் கையெழுத்து வாங்கிக்கொண்டு தான் டைப் செய்தார்கள் என்றால் ஆமாம் . அந்த பத்திரத்தில் நான் சாட்சி இல்லை . சாட்சி போட்டிருக்கும் சண்முகம் , மருதையாவை தெரியும். அவர்கள் கையெழுத்து போட்ட பிறகு தான் பத்திரம் வாங்கி வந்தார்கள் என்றால் பத்திரம் வாங்கி வந்து தான் கையெழுத்து போட்டார்கள் . அவ்வாறு ஒரு பத்திரமே ஏற்பட வில்லை என்றாலும் அதில் குணசேகரன் கையெழுத்து போடவில்லை என்றால் சரியல்ல . நான் பெரிய மகனுக்கு ஆதரவாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல . தற்போது என் இளைய மகனும் அவருடைய குடும்பத்தாரும் வசித்து வருகிறார்கள் என்றால் இளைய மகன் அந்த வீட்டில் மனைவி , மாமனார், மாமியாருடன் வசித்து வருகிறான் . எங்களை விரட்டி விட்டான் . இந்த கிரைய பத்திரத்தை ரத்து செய்ய வேண்டும் என்று நான் எங்கேயும் மனு செய்யவில்லை . என் இளைய மகன் பணம் கொடுத்து வாங்கிய வீடு என்றால் சரியல்ல . வாதிக்கு ஆதரவாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் நகர கூட்டுறவு சங்கத்தில் உறுப்பினராக இருந்த போது, அப்போது என் இளைய மகன் உறுப்பினராக இருந்தான் என்றால் சரியல்ல. நான் உறுப்பினராக இருந்ததால் நான் கையெழுத்து போட்டு என் மகனுக்கு கடன் வாங்கி கொடுத்தேன்.

Sd (xxxx)

Types to my dictation in open Court, read over and interpreted to the witness. Admitted and acknowledged by him/her to be correct.

Sd (xxxx)
Additional District Judge,

Fast Track Court,
Kumbakonam.

/True Copy/

Sd (xxxx)
Additional District Judge,
Fast Track Court,
Kumbakonam.